## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண். 44

## 2007, அக்டோபர் 22, திங்கள்கிழமை

## ஐப்பசி 5, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு - 2038

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

" அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. "

( துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும். )

### 1. வினாக்கள் – விடைகள்

வரிசை எண்கள் 21 மற்றும் 23 முதல் 30 வரை உள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் கேட்கப்பட்டு விடையளிக்கப்பட்டன.

வரிசை எண் 22-க்கான உடுக்குறியிட்ட வினா ஒத்திவைக்கப்பட்டது.

### 2. சிறப்பு கவன ஈர்ப்புகள்

(1) மத்திய அரசு நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.1,000/- என நிர்ணயிக்காததால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து திருவாளர்கள் சி. ஞானசேகரன், மு.க. பெரியசாமி, வே. மாரிமுத்து, சு. குணசேகரன் மற்றும் கு. செல்வம் ஆகியோர் சிறப்பு கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்தனர்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

(2) கோவை உக்கடம் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்ததில் 13 பேர் இறந்தது குறித்து திருவாளர்கள் கோவை தங்கம், சி. கோவிந்தசாமி, கி. ஆறுமுகம், வை. சிவபுண்ணியம் மற்றும் கு. செல்வம் ஆகியோர் சிறப்பு கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்தனர்.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

3) கடலூரில் உள்ள ஒரு தனியார் கிறிஸ்துவப் பள்ளியில் மாணவி ஒருவர் மர்மமான முறையில் இறந்தது குறித்து திரு. தி. வேல்முருகன் அவர்கள் சிறப்பு கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

4) கடலூர் சிப்காட் பகுதியில் சாஷன் நிறுவனப் பகுதியில் விஷக் கழிவு நீரை வெளியிடுவதால் குடிநீரில் கலந்து மர்ம நோய் ஏற்பட்டுள்ளதால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து திரு. தி. வேல்முருகன் அவர்கள் சிறப்பு கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்தார்.

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

..2

3. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு

1) தினமும் ஏற்படும் அதிகமான வாகன விபத்துக்களால் ஏராளமானவர்கள் இறப்பதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து திரு. கி. ஆறுமுகம் அவர்கள் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விவர அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளித்தார்.

2) வால்பாறை பகுதியில் ஒரு மாத காலமாக யானைகள் மற்றும் வன விலங்குகள், குடியிருப்புகளையும், கடைகளையும் தொடர்ந்து இடித்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து திரு. கோவை தங்கம் அவர்கள் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விவர அறிக்கை ஒன்றை பேரவைக்கு அளித்தார்.

4. தகவல் கோரல்

மேட்டூர் அணையிலிருந்து வீணாகச் சென்று கடலில் கலக்கக்கூடிய உபரி நீரை சேலம் மாவட்டம் முழுவதும் முறையாகப் பயன்படுத்திக் கொள்வது குறித்து திரு. ஜி.கே. மணி அவர்கள் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் விளக்கம் கோரினார்.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் ஒன்றைப் பேரவைக்கு அளித்தார்.

5. குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்

(1) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

திரு. ஜி. கே. மணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள், 2007-2008 ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் அறுபத்து இரண்டாவது முதல் அறுபத்து ஏழாவது வரையிலான (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

(2) அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

திரு. தி. வேல்முருகன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள், 2007-2008 ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் ஏழாவது முதல் பன்னிரெண்டாவது வரையிலான (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

(3) மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

திரு. அர. சக்கரபாணி, மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள், 2007-2008 ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் பத்தொன்பதாவது முதல் இருபத்து நான்காவது வரையிலான (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் ( அறிமுகம் செய்தல் )

(1) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(2) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு

---

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(3) 2007-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் ( திருத்தச் ) சட்டமுன்வடிவு

---

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(4) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு

---

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

7. அரசினர் சட்டமுன்வடிவு ( ஆய்வு செய்தல் )

---

(1) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.3) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.41/2007 )

---

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய அனுமதி கோரினார்.

திரு. சி. ஞானசேகரன் அவர்கள் விவாதத்தில் பங்கு கொண்டார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

8. அரசினர் தீர்மானம்

மாண்புமிகு நிதி அமைச்சர் (பேரவை முன்னவர்) அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களை முன்மொழிந்தார்.

1) " சட்டமன்றப் பேரவை விதி 30(3)-இன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள இனம் 6 மற்றும் இனம் 7(1) ஆகியவற்றை, இனம் 5(1)—க்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும். "

2) " சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல் ) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/2007); 2007—ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/2007); 2007-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.44/2007) மற்றும் 2007—ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.45/2007) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் ".

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டன.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(1) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.42/2007 )

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. ஜி.கே. மணி, செல்வி கே. பாலபாரதி, திரு. தி. இராமசாமி, திரு. டி. சுதர்சனம் மற்றும் எச். அப்துல் பாசித் ஆகியோர் விவாதத்தில் பங்கு கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சரின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 12 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

அறிவிப்பு

2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.39/2007 ) சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

(2) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.39/2007 )

---

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய அனுமதி கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏகமனதாக ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(3) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.31/2007 )

---

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய அனுமதி கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(4) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.35/2007 )

---

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(5) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.36/2007 )

---

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(6) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.37/2007 )

---

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

.7



பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(7) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.33/2007 )

---

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. என். நன்மாறன் ஆகியோர் விவாதத்தில் பங்கு கொண்டனர்.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(8) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊர் அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.34/2007 )

---

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

..8



மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(9) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு
( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.38/2007 )

---

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(10) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுறவரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு
( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.40/2007 )

---

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(11) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.43/2007)

---

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

..9



பிரிவுகள் 2 முதல் 6 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 6 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(12) 2007-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.44/2007)

---

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(13) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.45/2007)

---

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

..10



10. பேரவைக்கு ஓர் அறிவிப்பு

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கீழ்க்கண்டவாறு பேரவைக்கு அறிவித்தார்:–

" 1996-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, முதன்முறையாக, 15.11.1996 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ, சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், தனது பதவிக்காலத்தில் மறைந்தால் அவருடைய வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தது. இப்போது, 15.11.1996–க்கு முன்பு, ஒரு சட்டமன்ற உறுப்பினர் தனது பதவிக் காலத்தில் மறைவுற்றிருந்தாலும் அவரது வாரிசுதாரர்களுக்கும், அதேபோன்று, சட்டமன்ற மேலவையைப் பொறுத்த வரை, 31.10.1986 வரை ( அதாவது மேலவை கலைக்கப்படும் வரை ) மேலவையில் உறுப்பினராக பதவி வகிக்கும் காலத்தில் மறைந்த மேலவை உறுப்பினர்களது வாரிசுதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் 01.10.2007 முதல் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் மறைந்த உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கும் 01.10.2007 முதல் மாதமொன்றுக்கு ரூ.3,500/- வீதம் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூ.32.40 இலட்சம் ஆகும்.

இதன் மூலம், சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையில் பணியாற்றுகின் றகாலத்தில் மறைவுற்ற அனைத்து உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் கிடைக்க இவ்வரசு வழிவகை செய்துள்ளது என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். "

11. பேரவையை ஒத்திவைக்கும் தீர்மானம்

சட்டமன்றப் பேரவை விதி 25(1)-இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தார்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேரவை பிற்பகல் **1.52** மணிக்கு முடிவுற்று பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

**மா. செல்வராஜ்,**
**செயலாளர்.**

நாஅ/–